# எண்ணாகமம் - NUMBERS

"எண்ணாகமம்" புத்தகத்தை எழுதியவர் மோசே. இந்தப் புத்தகம் பஞ்சாகமங்களில் (ஐந்து ஆகமங்கள்) மூன்றாவது புத்தகமாக கோர்க்கப்பட்டிருக்கிறது. மொத்த அதிகாரங்கள் 36 மற்றும் வசனங்கள் 1288. இந்தப் புத்தகம் "வனாந்தரத்தில்" என்று பொருள் கொண்ட 'மித்மார்' என்ற எபிரெய மொழிச் சொல்லால் அழைக்கப்பட்டது. இஸ்ரவேலர் வனாந்தரப் பயணம் முடியுந்தருவாயில் இந்தப்புத்தகம் எழுதி முடிக்கப்பட்டிருக்கவேண்டும். எரிகோவிற்க்கு அருகிலிருக்கும் யோர்தான் நதிக்கரையில் அமைந்திருந்த மோவாபின் சமவெளிகளில் (எண் 36:13) எண்ணாகமம் புத்தகம் எழுதப்பட்டது. அவர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டின் கிழக்கு எல்லையை அடைந்ததுவரை 40 ஆண்டுகளாக நிகழ்ந்தவற்றின் தொகுப்பாக இந்த புத்தகம் உள்ளது. உலக வரலாற்றில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதன்முதலில் இந்தப்புத்தகத்தில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எண்ணாகமம் புத்தகத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திர சம்பவங்களும், தேவன் அவர்களுக்கு சொன்ன பிரமாணங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரின் அவிசுவாசமும் மற்றும் அவர்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்ததும், தங்களுடைய பாவங்களினிமித்தம் 40 ஆண்டுகாலம் வனாந்தரத்தில் சுற்றித் திரிந்ததும் இதில் இடம் பெற்றிருக்கிறது.

எண்ணாகமம் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள், சங்கீதம் 95:8-11வது வசனங்களில் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

***<u>சங்கீதம் 95:10-11</u>*** - *"நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்."*

இஸ்ரவேலர் இரண்டுமுறை எண்ணி தொகையேற்றப்படுகிறார்கள்.எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி வந்த இரண்டாம் வருடத்தில் முதல் முறையாகவும் (எண் 1:1-10:36), வனாந்தரத்தில் அலைந்து திரிந்து முடிந்து, கானான் தேசத்திற்க்குள் பிரவேசிப்பதற்க்கு முன்பாக இரண்டாம் முறையாகவும் (எண் 26) அவர்கள் எண்ணிக்கை தொகையேற்றப்படுகிறார்கள். இவ்விரண்டு எண்ணிக்கைக்கும் இடையில் 38 வருட கால இடைவெளி இருந்தது.



இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு இராஜ்ஜியமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களின் இராஜாவாக அவர்களுக்கு இருக்கிறார். இஸ்ரவேல் இராஜ்ஜியத்தில் கர்த்தரின் ஆளுகை நடைபெறுகிறது. நீங்கள் இன்று யாருடைய ஆளுகையின் கீழ் இருக்கிறீர்கள்? இயேசு கிறிஸ்து உங்களுடைய மெய்யான ஆண்டவராக இருக்கிறாரா? அவருடைய ஆளுகைக்குள் நீங்கள் வாழ்கிறீர்களா? உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் மோசேயிடம் சொல்லுகிறார் (எண் 1:1-4). இஸ்ரவேல் மக்களை எவ்வாறு எண்ணித் தொகையேற்றவேண்டும் என்றும், யாரையெல்லாம் எண்ணித்தொகையேற்றவேண்டும் என்றும் கர்த்தர் சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார்.

தேவன் இஸ்ரவேல் புத்திரரை இவ்வாறு எண்ணித்தொகையேற்றுமாறு சொல்வதற்க்கு தெய்வீக நோக்கங்களும், தெய்வீக காரணங்களும் இருக்கிறது. மோசே இப்பொழுது எண்ணும்பொழுது, இஸ்ரவேலின் லேவி கோத்திரத்தாரை எண்ணவில்லை. அவர்கள் யுத்தத்திற்க்கு புறப்படவேண்டிய கோத்திரமல்ல. அவர்களை தன்னுடைய ஊழியத்திற்க்கென்று பிரித்து வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரன் வனாந்தரத்தில் பொன் கன்றுக்குட்டியை வழிபடும்போது லேவி புத்திரர் அதை வழிபடவில்லை அந்த ஆராதனையில் பங்குபெறவுமில்லை. அவர்கள் கர்த்தர் மீது பக்திவைராக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். கர்த்தர் பட்சத்திலிருப்பவர்கள் தனியாகப்பிரிந்து தன்னிடத்தில் வரவேண்டுமென மோசே கூறியபோது, லேவி கோத்திரத்தார் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரிலிருந்து பிரிந்து மோசேயினிடம் வந்தனர் (யாத்தி 32:26).

நாம் தேவனுடைய ஊழியத்திற்க்காக கொடுப்பது என்பது ஒருபோதும் நமக்கு ஒரு இழப்பாக இருக்காது. நாம் இழந்துபோவதை தேவன் நூறத்தனையாக நமக்கு கொடுக்கக்கூடியவர். நாம் அனைவரும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மற்றும் அவருடைய ஊழியத்திற்க்காக பிரித்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

<u>செயல்முறை:</u> உங்களை சபைக்கு அழைத்தவருக்கு நன்றி சொல்லுங்கள்.

*"அப்பொழுது....... தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்."* மல்கியா 3:18.

இந்த அதிகாரத்தில் ஆரோனுக்கும் அவனுடைய குமாரருக்கும் மட்டுமே ஆசாரிய ஊழியம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. வேறு எவருக்கும் அந்த பொறுப்பு கொடுக்கப்படவில்லை. ஆரோனும் அவனுடைய குமாரருமன்றி வேறெவரும் அந்த ஆசாரிய ஊழியத்தினருகில் வருவதற்க்குக்கூட அனுமதி கிடையாது.

ஆனால் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் அனைவரும் தேவனால் பரிசுத்தர்கள் என்றும் தேவனுடைய சொந்த ஜனம் என்றும் ராஜரீகமான ஆசாரியக்கூட்டம் என்றும் சொல்லப்படுகிறோம். (1 பேதுரு 2:9).

எண்ணாகமம் 3:11-13 வரை வாசிக்கும்போது - இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; <u>அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்.</u>

தேவன், மேலும் கூறும்போது நான் எனக்கென்று பரிசுத்தப்படுத்தினதினாலே, அவைகள் என்னுடையவைகளாயிருக்கும்; நான் கர்த்தர் என்றார்.

தேவன் நம்மை தெரிந்துகொண்டார். எரேமியா தீர்க்கதரிசிக்கு கூறும்போதுகூட - நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

<u>செயல்முறை:</u> நீங்கள் தேவனால் தெரிந்துகொண்டதை எவ்வாறு உங்கள் வாழ்க்கையில் உணருகிறீர்கள்?

*‘‘நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; ......யோவான் 15:16.*



இந்த அதிகாரத்தில் லேவி கோத்திரத்தார் மறுபடியுமாக எண்ணப்படுகிறார்கள்.

ஒரு மனுஷனுக்கு இருபது வயது முதல் ஐம்பது வயது வரையிலான காலம் மிகவும் ஆரோக்கியம் நிறைந்த காலமாயிருக்கிறது. அவனால் எதையும் சிந்தித்து செயல்பட முடியும். அந்த திறனும் வலிமையும் இந்த வயதில் இருக்கிறது.

ஆசாரிய ஊழியம் என்பது மிகவும் கனம் பொருந்தியதாயிருக்கிறது. இதை செய்பவர்கள் மிகவும் உண்மையோடும், பரிசுத்தத்தோடும் மற்றும் பய பக்தியோடும் செய்யவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

நமக்குக்கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை நாம் எவ்வாறு பரிசுத்தத்துடனும், பய பக்தியுடனும் செய்கிறோம்? நாம் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்கிறோமா?

தேவன் ஆரோனுக்கும் அவனுடைய குமாரருக்கும் விஷேசித்த மேன்மையையும், அதிகாரத்தையும் கொடுக்கிறார். மற்ற இஸ்ரவேலரைப்பார்க்கிலும் லேவி குடும்பத்தார் விஷேசமாக நடத்தப்படுகிறார்கள்.

இயேசுவினிடத்தில் சகல அதிகாரமும் இருக்கிறது. அவர் நம்மை தெரிந்துகொண்டார். நாம் அவருடைய குடும்பத்தாராக இருக்கிறோம். இது எவ்வளவு பெரிய பாக்கியம். இதற்க்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோமா?

<u>செயல்முறை:</u> உங்களுக்கு சபையில் இருக்கக்கூடிய பொறுப்பு என்ன? அப்படி எதுவும் இல்லையென்றால் உங்கள் வழிநடத்துனரிடம் சென்று கேளுங்கள்.

*‘‘ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, எபேசியர் 2:19.*

இஸ்ரவேல் புத்திரருடைய பாளையத்திலிருந்து தீட்டுப்பட்டவர்கள் (பாவம் செய்தவர்கள்) யாவரையும் விலக்கிவிடவேண்டுமென தேவன் இங்கு கட்டளையிடுகிறார். அவர்கள் அனைவரும் தேவனுடைய பிரமாணத்தின்படி சுத்திகரிக்கப்பட்டபின்பே அந்த பாளையத்திற்க்குள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

ஆனால் இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டு நாம் பெறவேண்டிய தண்டனையை அவர் நமக்காக ஏற்றுக்கொண்டார்.

ஒருவன் பாவம் செய்து குற்றவாளியாகும்போது தன்னுடைய பாவத்தை அறிக்கையிடவேண்டும். தான் செய்த குற்றத்தினிமித்தம் அவன், குற்றம் செய்யப்பட்டவனுக்கு பாவநிவாரண கிரயத்தை செலுத்தவேண்டும். அசலோடு அபராதமும் சேர்த்து செலுத்தவேண்டும்.

**அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்தினிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க்கூட்டி, தான் குற்றஞ்செய்தவனுக்குச் செலுத்தக்கடவன்.** எண்ணாகமம் 5:7

அசுத்தமானவர்கள் அனைவரும் பாளையத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள். தேவன் சுத்தத்திற்க்கும் அசுத்தத்திற்க்கும் வித்தியாசம் ஏற்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே ஆசரிப்புக்கூடமும், பளையமும் சுத்தமாயிருக்கவேண்டுமென்று தேவன் சித்தமாயிருந்ததுபோல இப்பொழுது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சபையும் சபையிலுள்ள சீஷர்களும் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென எதிர்பாரிக்கிறார்.

*தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை;.....வெளி 21:27*

<u>செயல்முறை:</u> உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கை செய்து ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்யுங்கள்.

*''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.'' 1 கொரி 3:16-17.*



நசரேயர்கள் என்பவர்கள் தேவனுக்காக பொருத்தனை செய்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள். தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி தங்களை பரிசுத்தமாக காத்துக்கொள்ள முடிவெடுப்பவர்கள். தேவனுக்காக தியாகம் செய்பவர்கள். அவர்களைச் சுற்றியிருக்கும் மற்றவர்களுக்கு மத்தியில் ஒரு மாற்றத்தை காண்பிக்கும் நபர்களாக இருந்தவர்கள். தேவனுக்காக எதை இழக்கவும் தயாரக இருந்த நபர்கள்.

**அவர்கள் நசரேயர்களாக இருக்கும் நாளெல்லாம் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (வசனம் 8)**

இயேசுவை பின்பற்ற விரும்புகிற நாமும் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டபரிசுத்தர்களாக இருக்கிறோம். பாவம் இல்லாதவர்களாக இருப்பதற்க்கும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்வதற்கும் தேவன் நம்மை தேர்ந்தெடுத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கை நம்மை சுற்றியிருக்கும் மக்களுக்கு முன்பாக மாற்றத்தை காண்பிக்கிறதா? இவர்கள் தேவனை அதிகமாக அன்பு செய்கிற நபர்கள் என்று நம்மை சொல்லமுடிகிறதா?

நசரேயர்களை போலவே நாமும் நம்முடைய நேரத்தை தேவனுடைய வார்த்தைகளை படிப்பதற்கும், தியானித்து செயல்படுத்தி மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் செலவிட வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கிறார்.

வசனம் 22-27 ஆரோனுடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை தரக்கூடியதாக இருந்தது. நம்மையும் தேவன் ஆசாரியர்களாக அழைத்திருக்கிறார். நாம் கூறும் தேவனுடைய வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை தரும். நாம் மற்றவர்களிடம் அதை பகிர்ந்து கொள்வதற்கு எவ்வளவு ஆர்வமாக இருக்கிறோம்.

<u>செயல்முறை:</u> பரிசுத்தமாக இருப்பதற்கும் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொடுப்பதற்கும் எவ்வளவு விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை வழிநடத்துனரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.'' ' அப்போஸ் 2:42.*

இந்த அதிகாரத்தில் (எண் 7 : 1-2) தேவனுடைய திட்டத்தின்படி இஸ்ரவேலர் பலிபீடத்தின் எல்லா வேலைகளையும் செய்துமுடித்தனர். மேலும் இஸ்ரவேல் மக்கள் தங்களை பரிசுத்த படுத்தி கொள்வதற்க்காக இஸ்ரவேலர் அனைவரும் தேவனுக்கு காணிக்கையையும், பலிகளையும் செலுத்தினார்கள்.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லையென்று நம் அனைவருக்கும் தெரியும். இங்கு இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு முன்பாக தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்க்காக அநேக விதமான பலிகளை செலுதினார்கள்.(எண் 7 : 84-88)

நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை பரிசுத்தமாக மாற்றுவதற்க்காக இப்படிப்பட்ட எல்லாவிதமான பலிகளையும் இயேசுகிறிஸ்து செலுத்தினார், எப்படியென்றால் தன்னையே ஜீவபலியாக சிலுவை மரணத்தில் ஒப்புக்கொடுத்தார். ( 1 யோவான் 2 :2)

நம்முடைய எல்லாவிதமான பாவங்களையும் இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம் நீக்கி விட்டார் மற்றும் அவரே நமக்காக கிருபாதார பலியானார்.

தன்னையே கொடுத்த அவருக்கு நாம் இன்று எப்படிப்பட்ட பலிகளை செலுத்துகிறோம்? நம்மை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுப்பதுதான் நாம் அவருக்கு செலுத்தும் மெய்யான பலி.

<u>செயல்முறை:</u> தேவனிடத்தில் நம்மை முழுமையாக ஒப்புகொடுக்க எது தடையாக இருக்கிறது? (பாவம்,வேலை, படிப்பு, குடும்பம்..................) சிந்தித்து ஜெபியுங்கள்.

*“தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.” சங்கீதம் 51:17*



இந்த அதிகாரத்தில் வசனங்கள் 8:6-26 வரை நாம் வாசிக்கும்போது லேவியர்கள் தங்களைச் சுத்திகரித்து பரிசுத்தமாக்கும் செயல்களை குறித்து கூறப்பட்டுள்ளது. தேவன் அவர்களிடத்தில் உடைகளிலிருந்து அவர்கள் செய்யும் எல்லா காரியங்களிலும் பரிசுத்தத்தை எதிபார்க்கிறார்.

தேவனுடைய அந்த எதிர்பார்ப்பிற்க்கு வராத இஸ்ரவேலர் அழிக்கப்பட்டனர். அதேபோல் இன்று நம்மையும் இந்த உலகத்திலிருந்து தேவன் பிரித்தெடுத்திருக்கிறார். அது சாதாரண காரியமல்ல. அதை நாம் மிகப்பெரிய காரியமாக பார்க்கவேண்டும்.

இன்று நம்மிடமும் இதேபோன்ற கீழ்படிதலையும், பரிசுத்தத்தையும் மற்றும் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதையும் எதிர்பார்க்கிறார். ஆனால் பல நேரங்களில் நாம் தவறுகளில் விழக்கூடியவர்களாகவே இருக்கிறோம். லேவியர்களைவிட நமக்கு அதிக கிருபையை இயேசு கிறிஸ்து கொடுத்திருக்கிறார். அதை நாம் நன்று புரிந்து நன்றியுள்ள உணர்வோடு மனந்திரும்பவேண்டும்.

அதிகாரம் 9ல் தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்ததையும், அவர்களுக்காக யுத்தம் செய்ததையும் பஸ்கா மூலமாக நினைப்பூட்டினார். இஸ்ரவேலர் மேகஸ்தம்பத்தின் மூலமாகவும் அக்கினி ஸ்தம்பத்தின் மூலமாகவும் மட்டுமே வழிநடத்தப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவேளையும் தங்களுடைய வாழ்க்கையின் பாதைக்காக மேகஸ்தம்பத்தையே உற்று நோக்கியிருக்கவேண்டியிருந்தது. தேவனை மட்டுமே சார்ந்து இருக்கவேண்டியிருந்தது.

நீங்கள் எந்த அளவு தேவனை சார்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் மனிதரையா அல்லது தேவனையா யாரை அதிகம் நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள்? தேவனை மட்டுமே சார்ந்து வாழ முடிவெடுப்போம். அவர் நம்மை ஒருபோதும் தவறான பதையில் வழி நடத்துவது கிடையாது. இதனை முற்றிலும் விசுவாசித்து நம்முடைய வாழ்வை தேவனுக்கென்று ஒப்புக்கொடுப்போம்.

<u>செயல்முறை:</u> உங்களுடைய வாழ்க்கையில் எது மேகஸ்தம்பமாயிருக்கிறது? உங்களுடைய பாவ உணர்வுகளா அல்லது வேதமா?

*“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” சங்கீதம் 119:105.*

கர்த்தர் இங்கே மோசேயிடம் இரண்டு வெள்ளி பூரிகைகளை செய்யும்படி சொல்கிறார். அவைகள் ஒரே வெள்ளித்தகட்டால் செய்யப்படவேண்டுமென கூறுகிறார். அந்த இரண்டு எக்காளத்தையும் நான்கு காரியங்களுக்கு ஊதும்படி கட்டளையிடுகிறார்.

1. சபை கூடிவருவதற்க்கும்
2. பாளையத்திலிருந்து பிரயாணப்படுவதற்க்கும்
3. யுத்தத்துக்குப் போகும்போதும்
4. பண்டிகை கொண்டாடும்போதும்

இதை தலைமுறை தலைமுறைக்கும் நித்திய கட்டளையாக கொடுக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் தங்கள் கோத்திரப்படி எண்ணிக்கை பார்த்தபிறகு எவ்வாறு பயணம் செய்யவேண்டுமென தேவன் தெரிவிக்கிறார்.

இன்று தேவன் இந்த எக்காளத்தை நமக்கு வசனங்களாக கொடுத்திருக்கிறார். நாம் பாவத்திலிருக்கும்போது இந்த வசனங்களினால் எச்சரிக்கை செய்யப்பட்டு மனந்திரும்ப வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

மேலும் நம்மை பட்டணத்தின் காவலர்களாக ஏற்படுத்தியிருக்கிறார் (எசே 33:2-7). ஆகையால் நாம் மற்றவர்களுக்கு தேவனுடைய வசனத்தை கூறுகிறவர்களாகவும், பாவத்திலிருப்பவர்களுக்கு எச்சரிக்கை கொடுப்பவர்களாகவும் மற்றும் இரட்சிப்பின் செய்தியை அறிவிப்பவர்களாகவும் இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

தேவன் இஸ்ரவேலரை மட்டும் தெரிந்துகொண்டபோதிலும், மோசே மீதியானியனான ஓபாவை தங்களுடன் இருக்கும்படி சொல்கிறார். அதேபோல் நாமும் தேவனைப்பற்றி அறிந்தவர்களும், அறியாதவர்களும் வசனத்தின்படி சீஷர்களாக வாழ அழைக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

**செயல்முறை:** யாராவது ஒருவருக்கு அவருடைய பாவத்திலிருந்து மாறுவதற்க்கு வசனத்தின்படி உதவி செய்யுங்கள்.

*''சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி''. ஏசாயா 58:1.*



இஸ்ரவேலர் இதுவரையிலும் மனப்பூர்வமாய் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடக்கக்கூடியவர்களாகவே இருக்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணமும், அவருடைய சத்தியமும் அவர்களுக்குள்ளே சொல்லப்படும்போது, அவர்கள் கவனமாய் செவிகொடுத்து கேட்கிறார்கள்.

இஸ்ரவேலர் மத்தியில் சகலமும் சீராகவும் ஒழுக்கமாகவும் நடைபெறுகிறது. ஆனாலும் இந்த அதிகாரத்தில் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து முறையிடுகிற சம்பவம் நடக்கிறது. கர்த்தருடைய கோபத்தின் அக்கினி அவிந்துபோனாலும் இஸ்ரவேலரின் பாவத்தின் வேகம் குறையவில்லை. அவர்கள் மறுபடியுமாய் பவம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

தேவன் இஸ்ரவேலருக்கு இறைச்சியை அளிப்பதாக வாக்களிக்கிறார். அவர் எப்படிப்பட்ட இறைச்சியை அளிப்பார் என்பது மோசேவிற்க்கு தெரியாது. தேவனுடைய கரம் குறுகியிருக்கவில்லை. ஆனால் மோசேயின் விசுவாசமோ குறுகியிருந்தது. இயேசுவின் சீஷர்களிடத்திலும் இவ்வாறான சந்தேகம் இருந்தது (மாற்கு 8:1-4).

“கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ?” என்று தேவன் மோசேயிடம் கேள்வி கேட்கிறார்.”என் வார்த்தையின்படி நடக்குமோ, நடக்காதோ என்பதை நீ இப்போது காண்பாய்” என்று கர்த்தர் மோசேயிடம் கூறுகிறார். பொய் கூறுவதற்க்கு அவர் ஒரு மனுபுத்திரனல்ல. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் ஜீவனுள்ளது, அது நிறைவேறும்.

அற்புதம் செய்வதற்க்கு தேவனுடைய கரம் குறுகியிருக்கவில்லை என்பதையும், அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாத சர்வ வல்லவராயிருக்கிறார் என்பதை மோசேவிற்க்கு தெரியப்படுத்தினார். நாம் ஆராதிக்கும் தேவன் இன்னார் என்பதை அறிந்திருந்தால் மாத்திரமே, நம்மால் அவரைக்குறித்து பிறரிடம் கூறமுடியும்.

**செயல்முறை:** கடந்த ஒரு வாரத்தில் நீங்கள் முறுமுறுத்த காரியங்கள் எவை என்று பட்டியலிடவும்.

*''பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.'' 1 யோவான் 4:4.*

இங்கு ஆரோனும் மிரியமும் மோசேக்கு விரோதமாக, கர்த்தர் எங்களிடமும் பேசியிருக்கிறார் என்று கூறி மோசேயை சோர்வடையச் செய்தார்கள். கர்த்தர் மோசேக்காக பேசும்போது அவரைக் குறித்து :

- "பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகவும் சாந்தகுணமுள்ளவர்"
- "என் தாசனாகிய மோசே"
- " மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்"
- "நான் மோசேயுடன் முகமுகமாக பேசினேன்"
- "மோசேக்காக அவர்கள் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது"

என்று மோசேயின் ஒப்பற்ற குணங்களைக்குறித்து கூறுவதை காண்கிறோம். இன்று தேவன் நம்மைப்பற்றி சாட்சி கூறினால் அது எப்படிப்பட்டதாக இருக்கும்? அது மட்டுமில்லாமல் தேவன் நியமித்த தலைவர்களை நாம் தவறாக பேசும்போது தேவன் அவர்களுக்காக பேசுகிறார். நம்முடைய தலைவர்களையும் வழிநடத்துனர்களையும் நாம் எவ்வாறு நடத்துகிறோம்?

எண்ணாகமம் 13 - தேவன் தாம் வாக்குதத்தம் செய்த கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காக 12 நபர்களை அனுப்பும்படி கட்டளையிடுகிறார். அதை பார்த்து வந்த 10 நபர்களும் அங்குள்ள பிரச்சனைகளையும் அங்குள்ள நபர்களையும் பார்த்து எதிர்மறையான பதில்களை தந்து மோசேயையும் தலைவர்களையும் சோர்வடையச்செய்தார்கள். ஆனால் காலேப் மட்டும் "நாம் அந்த தேசத்தை சுதந்தரித்து கொள்ளலாம்" என்று தேவன் மீதுள்ள நம்பிக்கையை வார்த்தைகளாக கூறினார்.

நம்முடைய வாழ்க்கையிலும் நம்மை சுற்றியுள்ள எதிர்மறையான பிரச்சனைகளை பார்க்கும் போது நம்முடைய வார்த்தைகள் நம்மையும் நம்மை சுற்றியுள்ளவர்களின் விசுவாசத்தையும் சிதறடிக்கச் செய்யும். ஆனால் காலேபை போல நம்முடைய நம்பிக்கை தேவன் பட்சத்தில் இருந்தால் அது நம்முடைய விசுவாசத்தை மட்டுமல்ல மற்றவர்களின் விசுவாசத்தையும் அதிகரிக்கச் செய்யும். நம்முடைய வார்த்தைகள் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நம்மை சுற்றியுள்ளவர்களின் விசுவாசத்தை சிதறடிக்கச் செய்கிறதா அல்லது மற்றவர்களின் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்கிறதா?

<u>செயல்முறை:</u> உங்களுடைய வழிநடத்துனரைப்பற்றிய ஒரு நல்ல காரியத்தை அவரிடம் கூறி அவரை உற்சாகப்படுத்தவும்.

*"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்." எபிரெயர் 13:7.*



இந்த அதிகாரத்தில் (எண் 14 : 1 - 4) இஸ்ரவேல் ஜனங்கள் நெருக்கடியான சூழ்நிலை வரும்போது சுலபமாக தேவன் மீது இருக்கும் விசுவாசத்தைவிட்டு விலகிபோவதையும், முறுமுறுத்து குறை சொல்வதையும் பார்க்கிறோம்.

இன்று நம்முடைய வாழ்க்கையில் எவ்விதமான நெருக்கடியான சூழ்நிலை நம்மை தேவனைவிட்டு பின்னோக்கி பார்க்கச்செய்கிறது? எது நம்மை முறுமுறுக்க வைக்கிறது?

1 கொரி 10:13 - நம்மால் எந்த அளவு போராடமுடியுமோ அந்த அளவிற்க்கு தான் நாம் சோதிக்கப்படுகிறோம். தேவன் அதற்கு வேண்டிய பெலத்தையும் தருகிறார். நாம் பின்னோக்கி பார்க்காமல், முறுமுறுக்காமல் தேவன் மீது நம்பிக்கை வைத்து வாழ்வோம்.

மேலும் (எண் 14:11-12) தேவன் இஸ்ரவேல் மக்களை அழித்துப்போட்டு மோசேயை கொண்டு ஒரு புதிய ஜாதியை உண்டாக்க திட்டமிட்டிருந்தார். ஆனால் மோசே இஸ்ரவேல் மக்களுக்காக தேவனிடம் பரிந்து பேசுபவராக இருந்தார். அவர்களுக்காக தேவனிடம் மன்றாடினார். தேவன் மோசேயின் வேண்டுதலை கேட்டு அவர்களை மன்னித்தார். (எண் 14:19-20).

இன்று நம்மோடு இருக்கிற ஒருவர் வழிதப்பிபோகும்போது, பெலவீனப்படும்போது நாம் அவருக்காக எப்படிப்பட்ட முயற்சிகள் செய்கிறோம்? தேவனிடத்தில் மோசேயை போல் அவர்களுக்காக மன்றாடுகிறோமா?

உங்களுடைய குடும்ப சபையிலுள்ளவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா? சபையிலுள்ள அனைத்து சீஷர்களின் பெயர்களும் உங்களுக்குத் தெரியுமா? அப்படி தெரியவில்லையென்றால் உங்கள் குடும்ப சபை தலைவரிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

<u>செயல்முறை:</u> பலவீனரை தாங்கவேண்டும் என்றும், சபையிலுள்ள அனைத்து சீஷர்களும் கர்த்தருக்குள் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் ஜெபியுங்கள்.

*"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." கலாத் 6:2.*

இந்த அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எவ்வளவாய் அன்பு செய்தார் என்பதை நம்மால் பார்க்கமுடிகிறது. வசனங்கள் 1-2 வாசிக்கும்போது, அந்த ஜனங்கள் பலவருடங்களுக்கு பிறகு செய்யவேண்டிய காரியங்களையும் தேவன் முன்னதாகவே அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பராக தேவன் அவர்களை வழிநடத்துகிறார். நாளைக்கு என்ன செய்யவேண்டுமென்றும் மற்றும் அவர்கள் வாழ்நாளில் கடைபிடிக்க வேண்டிய நியமங்களை அவர்களுக்கு முன்கூட்டியே போதிக்கிறார்.

இன்று நம்மை வழிநடத்தக்கூடிய உண்மையான ஒரு நல்ல மேய்ப்பர் நமக்கு உண்டு. அவர் நம்மை வழிதப்பிபோகவிடார். அன்று அந்த ஜனங்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்க்காக அநேக பலிகளை இடவேண்டியிருந்தது. இன்று நமக்காக இயேசு தாமே ஜீவபலியானார். ஏனெனில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு கிடையாது (எபி 9:22).

1 சாமு 15:22 ன்படி பலிகளை பார்க்கிலும் கீழ்படிதலும் செவிகொடுத்தலுமே உத்தமம் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்று கீழ்படிதலின் மூலமும் செவிகொடுப்பதன் மூலமும் சிறந்த பலிகளை செலுத்தமுடியும். நாம் தேவனுக்கு கீழ்படிகிறோமா? அவர் சத்தத்திற்க்கு (வேதம்) செவிகொடுக்கிறோமா?

வச 30-31 ல் துணிகரமான பாவத்திற்க்கு தண்டனை உண்டு. பாவம் செய்வதற்க்கான துணிகரமான இருதயம் நமக்கு வராதபடிக்கு ஜெபிப்போம். வச 32-36ல் ஓய்வு நாளை தேவனுக்கு கொடாமல் யாதொரு வேலை செய்தாலும் அவன் கல்லெறியப்படவேண்டுமென சொல்லப்பட்டிருக்கிறது. உங்களுடைய வாழ்க்கையில் தேவன் எந்த இடத்தில் இருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையில் வேறு எந்தெந்த காரியங்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்கிறீர்கள்?

<u>செயல்முறை:</u> காலையில் நீங்கள் எழுந்ததும் செய்யக்கூடிய முதல் மூன்று செயல்கள் எவை? 1. 2. 3.

*“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.” மத்தேயு 6:33.*



தேவன் இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம் பண்ணின இடத்துக்கு அழைத்து செல்லும்பொது கோராகு, தாத்தான், அபிராம் மற்றும் இஸ்ரவேல் புத்திரரில் சபைக்கு தலைவர்களில் பிரபலமான 250 பேர்களை சேர்த்துக்கொண்டு மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள். தேவன் அதை கேட்டவுடன், நான் அவர்களை ஒரு நிமிஷத்தில் அதமாக்குவேன் என்றார், அப்போழுது மோசே அவர்களுக்காக தேவனிடம் பரிந்து பேசக்கூடியவராக இருந்தார்.

இதில் 253 பேர் இறத்தார்கள். இதை பார்த்தபிறகும் மீண்டும் மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள், வாதை வந்து 14,700 இறந்து போனார்கள். அந்த சமையத்தில்கூட மோசே ஆரோனிடம் எல்லாருடைய பாவத்திற்க்காகவும் நிவர்த்திசெய் என்றார்.

அதேபோல் நம்மையும் இயேசு அவருடைய சீஷராக அழைத்திருக்கிறார், நம்முடைய இந்த வாழ்கையில் காரியங்கள் சரியாக செல்லவில்லை என்றால் நாமும் தேவனை குறைசொல்லி, என்ன இந்த வாழ்க்கை என்று முறுமுறுக்கக்கூடியவர்களாக இருக்கிறோமா? மற்றும் பாவம் செய்து அவருக்கு எதிர்த்து நிற்க்கக்கூடியவர்களாக இருக்கிறோமா?

மோசேயானவர், இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்யும்போது அவர்களுக்காக தேவனிடம் பரிந்துபேசக்கூடியவராக இருந்தார். இருந்தபோதும் தேவன் பாவம் செய்தவர்களை அழித்துபோட்டார். ஆனால் இன்று நம்மை அவர் அழிப்பது கிடையாது ஏனென்றால் இயேசு நம்முடைய பாவத்திற்க்காக எல்லாவிதமான பாடுகள் பட்டு சிலுவையில் மறித்திருக்கிறார். ஆகையால் இன்று கிருபை கிடைத்திருக்கிறது. மேலும் நமக்காக பிதாவிடம் பரிந்துபேசுகிறார். அவர் தந்த இந்த வாழ்க்கைக்கு எப்படி நன்றியுள்ளாவர்களாக இருக்கிறோம்?

<u>செயல்முறை:</u> உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்க்கு நன்றி செலுத்தும் விதம் தேவனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

*“பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.” ரோமர் 6:23.*

தேவன் மனிதர்களுடைய இருதயங்களையும் அதன் எண்ணங்களையும் அறிந்திருக்கிறார். கோத்திரப்பிரபுக்களின் கலகமும், முறுமுறுப்பும் அதிகரிப்பதற்க்கு முன்பாகவே, தேவன் இந்த பிரச்சனையை தீர்த்துவைக்கிறார். தேவன் ஆரோனுடைய கோலை துளிர்க்கச்செய்து, இஸ்ரவேல் ஜனங்களின் மத்தியில் ஏற்படும் பிரச்சனைக்கு தீர்வு கொண்டுவருகிறார்.

தேவன் இந்தப்பிரகாரமாகவே நம்முடைய வாழ்க்கையை துளிர்க்கச்செய்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக உருவாக்கியிருக்கிறார். ஆரோனுடைய கோல் மாத்திரம் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமை பழங்களை கொடுத்தது. இவை அனைத்தும் ஒரே இரவு பொழுதில் நடந்தேறியது, இது தேவன் செய்த அற்புதம். ஆரோனைப்போன்று நாமும் தேவனால் துளிர்விடப்பட்டிருக்கிறோம்.

இன்று நாம் கனிதரும் சாட்சியாக இருக்கிறோமா? கடைசியாக எப்பொழுது கனி கொடுத்தோம்? சீஷத்துவ வாழ்க்கை கனிகொடுக்கும் வாழ்க்கையாக இருக்கவேண்டும். தேவனுக்கு பிரியமாகவும், சபைக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமான வாழ்க்கை வாழக்கூடியவர்களாகவும் இருக்க முடிவெடுப்போம்.

எண் 18:20....**இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்** என்று தேவன் குறிப்பிடுகிறார். இது எவ்வளவு விசேஷித்த காரியமாக இருக்கிறது. தேவன் இந்த உலகத்திலுள்ளவர்களைக் காட்டிலும் உங்களை எவ்வளவு சிறப்பாக வழிநடத்துகிறார்?

தேவனுடைய சமூகத்திலே நாம் ஜெபங்களையும், துதிகளையும் ஏறெடுப்பதுபோல், நம்முடைய இருதயங்களையும் தேவனுக்கு நேராக உயர்த்தவேண்டும். அவரே நம்முடைய பங்கு.

<u>செயல்முறை:</u> தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்த நன்மைகளை பட்டியலிடவும்.

*"...என் நாமத்தினிமித்தம் வீடடையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்;" மத்தேயு 19:27-30*



இந்த அதிகாரத்தில் தீட்டுப்பட்டவனை சுத்திகரிப்பதற்க்காக கிடாரியின் சாம்பல் பயன்படுகிறது. அந்த கிடாரி பழுதற்றதும் ஊனமில்லாததும் நிறைவானதுமாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

தேவனுக்கு செலுத்தப்படும் எந்த பலியும் விலங்கானாலும் பறவைகளானாலும் மற்ற எந்த பொருட்களானாலும் அவைகள் பழுதற்றதும் நிறைவானதும் முதன்மையானதாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார்.

அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறதுபோல, அவரும் நமக்கு கொடுத்த அனைத்து ஆசீர்வாதங்களையும் பழுதற்றதும் நிறைவானதும் முதன்மையானாதாகவும் கொடுத்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்து நாம் சுத்திகரிக்கும்படியாகவும் நம்முடைய பாவங்களை நீக்கும்படியாகவும் தம்மைதாமே பழுதற்றதும் நிறைவான பாவநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்தார்.

நம்முடைய பாவமாகிய தீட்டை அவரது இரத்தத்தினால் சுத்திகரித்தார்!!!

நாம் அவரது தியாகத்திற்க்காக எந்த அளவிற்கு நன்றியுணர்வை காண்பிக்கின்றோம்? இயேசு நம்க்காக செய்த தியாகத்திற்க்காக நன்றி செலுத்துங்கள்.

நாம் தேவனுக்கு கொடுக்கும் நேரம்.. காணிக்கை.. பொறுப்புகள்.. ஆகியவை எந்த அளவிற்கு நிறைவானதாகவும், பழுதற்றதாகவும் மற்றும் முழுமையானதாகவும் இருக்கிறது? அவைகள் தேவனுக்கேற்க்கும் விதமாக இருக்கின்றதா என்பதை சிந்திப்போம்.

<u>செயல்முறை:</u> இன்று நீங்கள் யாராவது ஒரு நபரிடம் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் அவர் உங்களுக்காக சிலுவையில் செய்த தியாகத்தைப்பற்றியும் குறித்து பகிர்ந்துகொள்ளவும்.

*"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." 1 பேதுரு 2:24.*

இஸ்ரவேல் ஜனங்கள் காதேசில் சீன் வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள். இந்த இடத்தில் ஜனங்கள் மோசேவுக்கும் ஆரோனுக்கும் விரோதமாக வாக்குவாதம் பண்ணினார்கள். ஏனென்றால் ஜனங்களுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லாமலிருந்தது.

உடனே மோசேயும் ஆரோனும் தேவனிடத்தில் முறையிட்டனர். தேவன் அவர்களுக்கு செய்யவேண்டிய செயலை கட்டளையிடுகிறார். ஆனால் மோசேயும் ஆரோனும் தேவனுக்கு கீழ்படியாமல் தங்கள் பாவத்தினிமித்தம் தேவனுடைய கட்டளையை மீறுகிறார்கள். கன்மலையைப் பார்த்து பேசுங்கள் (20:7) அப்பொழுது இஸ்ரவேலர் மத்தியில் என்னுடைய நாமம் மகிமைப்படும் என்று தேவன் கூறியபோதிலும் இவர்கள் கன்மலையை (20:11) அடித்தார்கள்.

இப்படி மோசேயும் ஆரோனும் தேவனுக்கு கீழ்படியாமலும் மற்றும் அவரை கனப்படுத்தாமலும் போனதினிமித்தம், தேவன் அவர்களை நோக்கி நீங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்குள் நுழைவதில்லை என்று கூறுகிறார்.

இன்று தேவன் நமக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். பரலோக இராஜ்ஜியத்தில் என்னுடன் இருப்பீர்கள் என்ற வாக்குத்தத்தத்தை இயேசு கிறிஸ்து மூலமாக நாம் பெற்றிருக்கிறோம்.

இன்று நம்முடைய கீழ்படிதல் எவ்வாறு இருக்கிறது. நாம் முழு இருதயத்தோடு கீழ்படிகிறோமா? தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள் என்று எபேசியர் 5:21ல் வாசிக்கிறோம்.

<u>செயல்முறை:</u> உங்களுக்கு எந்த காரியத்தில் கீழ்படிதல் என்பது மிகவும் கடினமாக இருக்கிறது?

*''ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.'' எபி 4:11.*



இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்கு செல்லும் வழியில் அவர்களுக்கு அநேக தடைகள் ஏற்படுகின்றது. இந்த பிரச்சனைகளினிமித்தம் அவர்கள் சோர்ந்து போனார்கள் மற்றும் மனமடிவடைந்துபோனார்கள்.

இப்படிப்பட்ட சோதனை நேரங்கள் வரும் வேளையில் நாம் தேவனிடத்தில் நெருங்கி சேர்வதற்க்கான கருவிகளாக அதை பயன்படுத்த வேண்டுமேத் தவிர முறுமுறுக்கக்கூடாது.

இஸ்ரவேல் ஜனங்கள் மீண்டுமாய் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்தனர். இதன் விளைவாக (21:6) தேவன் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார். அவைகள் ஜனங்களை கடித்ததினால் அநேக ஜனங்கள் மடிந்துபோனார்கள்.

நாம் தொடர்ந்து வாசிக்கும்போது இஸ்ரவேல் மக்களுக்கு வழி விடாமல் தடுக்கும் அநேக இராஜாக்களைக்குறித்து பார்க்கமுடிகிறது. அவர்கள் அனைவருடைய கைக்கும் தேவன் அவர்களை தப்புவிக்கிறார். பாவத்திலிருந்து மனந்திரும்பும்போது நமக்கு ஜெயம் கிடைக்கிறது. இஸ்ரவேலருக்கு ஜெயம் கிடைத்ததினால் அவர்கள் தேவனை நோக்கி: “ஊற்றுத் தண்ணீரே பொங்கிவா” (21:17) என்றும் “அவர்களை எய்துபோட்டோம்” (21:30) என்றும் பாடினார்கள். நாம் பாவத்திலிருந்து விடுபடும்போது வெற்றியும் மற்றும் நிறைவான சமாதானமும் சந்தோஷமும் நம்மைப் பின் தொடரும்.

<u>செயல்முறை:</u> நீங்கள் எந்த பாவத்தை விடமுடியாமல் தொடர்ந்து அதில் போராடிக்கொண்டிருக்கிறீர்கள்? அதிலிருந்து மாறுவதற்க்கான முயற்சிகளை எடுப்பதற்க்கு ஆலோசனை பெறுங்கள்.

*''சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.'' யோவன் 3:14-15.*

இந்த அதிகாரத்திலிருந்து பாலாகையும், பிலேயாமையும் பற்றிய நிகழ்வுகள் ஆரம்பமாகிறது. அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்க்காக முயற்சி மேற்கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி தோல்வியடைகிறது.

பாலாக் இஸ்ரவேலரினிமித்தம் கலக்கமடைகிறான். அவனால் போரின்மூலம் இஸ்ரவேலரை ஜெயிக்கமுடியாத நிலையில் இஸ்ரவேலரை சபிப்பதற்க்காக சதி ஆலோசனை செய்து பிலேயாமை நாடுகிறான். ஆனால் அவனுடைய முயற்சியெல்லாம் வீணாகிறது. ஏனென்றால் இஸ்ரவேலருக்காக யுத்தம் செய்வது தேவனாகிய கர்த்தர். அவரை எதிர்த்து எந்த சக்தி வந்தாலும் அது வீணாகத்தான் முடியும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் சுற்றி அலையும் பிரயாணம் நிறைவடைகிறது. எண் 14:45 லிருந்து எண் 20:14 வரை கிட்டத்தட்ட 38 வருடங்கள் கடந்துபோகிறது (உபாகமம் 2:14). பின்பு அவர்கள் எரிகோவின் அருகிலிருக்கும் யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமவெளியில் பாளயமிறங்குகிறார்கள். (22:1)

இங்கு பிலேயாமை பல முறை தேவன் தடுத்தாலும் அதையெல்லாம் உதறிவிட்டு மீண்டும் மீண்டும் தேவனுக்கு விரோதமாக செயல்படவே அவனுனைய கால்கள் விரைந்தோடியது. வசனம் 28ல் வாசிக்கும்போது தேவன் கழுதையின் வாயைத்திறந்து அதன் மூலம் பிலேயாமுக்கு புத்தி கூறுகிறார். தேவனால் எதுவேண்டுமானாலும் செய்யக்கூடும் என்றும் தேவன் நினைத்தால் யார் மூலம் வேண்டுமானாலும் புத்தி சொல்ல முடியும் என்றும் இங்கு விளங்கச்செய்கிறார். தேவன் நினைத்தால் கல்லுகளிலிருந்தும் ஆபிரகாமிற்க்கு சந்ததியை உண்டுபண்ணமுடியும்.

நல்புத்திமதியை ஏற்றுக்கொள்ளும் மனம் நம்மிடம் இருக்கிறதா? புத்திமதியை ஏற்றுக்கொளவதற்க்கு எவ்வளவு ஆர்வம் காட்டுகிறோம்?

<u>செயல்முறை:</u> இன்று உங்களுடைய வாழ்க்கையில் யாருடைய புத்திமதியை நீங்கள் கேட்கிறீர்கள்?

*“நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்” சங்கீ 141:5.*



பாலாக் பலிகளை செலுத்தி கர்த்தரைப்பிரியப்படுத்தலாம் என்று நினைக்கிறான். அவன் பெரிய வெகுமதிகளைக் கொடுத்து பிலேயாமை பிரியப்படுத்தினான். பிலேயாம் பாலாக்கின் பக்கம் சேர்த்துக்கொள்ளப்படுகிறான். அதுபோலவே கர்த்தருக்கு பலிகளை செலுத்துவதால் அவர் பிரியப்படுவார் என்றும் தனக்கு சாதகமாக இருப்பார் என்றும் தப்புக் கணக்கு போடுகிறான்.

லோத்தின் சந்ததியாரான மோவாபியர் ஆபிரகாமையும் ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரையும் மறந்துவிட்டு, இஸ்ரவேல் ஜனங்களை பகைக்கிறார்கள். மோவாபியருக்கு, இஸ்ரவேலின் தேவனைப்பற்றியும் அவர் இஸ்ரவேல் ஜனங்களின் மத்தியில் இருக்கிறார் என்றும் அவரே அவர்களுக்கு வெற்றிகளை கொடுக்கிறார் என்றும் அறிந்திருந்தார்கள். அதனால் தான் அவர்களை யுத்தத்தில் சந்திக்க திராணியில்லாமல் குறுக்கு வழியில் சென்று அவர்களை சபிப்பதற்க்காக கூலிக்கு ஆள் நியமிக்கிறார்கள்.

கர்த்தர் பிலேயாமின் வாயிலே தம்முடைய வார்த்தைகளை அருளுகிறார். அந்த வார்த்தைகள் பிலேயாமோ அல்லது பாலாகோ எதிர்பார்த்த வார்த்தைகளல்ல. இஸ்ரவேலரை சபிக்கவேண்டுமென்பது அவர்களது விருப்பம் ஆனால் அவர்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்பது தேவனுடைய விருப்பம் (உபாகமம் 23:5). இஸ்ரவேலரை சபிக்க வந்தவன் இப்பொழுது அவர்களை ஆசீர்வதித்து, இஸ்ரவேலுக்கு சந்தோஷமும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும் உண்டாகும் என்று கூறுகிறான்.

இந்த பிலேயாமைக்குறித்து 2 பேதுரு 2:15-16 மற்றும் யூதா 11 இல் வாசிக்கிறோம்.

<u>செயல்முறை:</u> தேவன் உங்களுடன் இருக்கிறார் என்றும் உங்கள் மத்தியில் வாசம் செய்கிறார் என்பதையும் எதன் மூலம் உணருகிறீர்கள்?

*“இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?.” ரோமர் 8:31-32.*

பாலாக் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படி பாலாமிடத்தில் வேண்டிக்கொள்கிறான். ஆனால் பாலாம் தொடர்ந்து அந்த ஜனங்களை சபிப்பதற்கு பதிலாக தேவனுடைய வார்த்தைகளை கொண்டு ஆசீர்வதிக்கிறான். பாலாம் தன்னுடைய சுயநலத்திற்காக பாலாக்குடன் சென்றாலும் தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் பட்சத்தில் இருந்ததால் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. தேவன் நம் பட்சத்தில் இருக்கும்போது யாரும் அவரைமீறி நம்மை எதுவும் செய்யமுடியாது.

இன்று நம்முடைய வாழ்க்கையிலும் தேவனுடைய வார்த்தைகளை நடைமுறைப்படுத்தும் போது நம்முடைய சவுகரியமான காரியங்களை இழக்க நேரிடும் அதற்கு நாம் தயாரக இருக்கிறோமா?

அதிகாரம் 25ல் பினெகாஸின் பக்திவைராக்கியத்தை காண முடிகிறது. இங்கு பாலாமின் அறிவுரையால் பாலாக் மோவாபிய ஸ்தீரிகளை இஸ்ரவேல் ஜனங்களிடம் அனுப்பி அவர்களை பாவத்தில் விழும்படி செய்தான். இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுடைய கட்டளைகளை மறந்து பாவத்தில் விழுந்தார்கள். அதனால் 24000 பேர் இறந்து போனார்கள். நம்முடைய பாவமும் தேவனுக்கு விரோதமான எந்த அநீதியான காரியங்களும் நம்மையும் நம்மை சுற்றியுள்ளவர்களையும் பாதிக்கும்.

ஆனால் அதே நேரத்தில் பினெகாஸின் பக்திவைராக்கியம் அந்த ஜனங்களை காப்பாற்றியது மட்டுமல்லாமல் அவருடைய தலைமுறையையும் தேவன் ஆசீர்வதித்தார். நம்முடைய பாவம் மற்றும் அதற்க்கான சமரசம், நம்மையும் நம்மை சுற்றியுள்ளவர்களையும் பாதிக்கும். அதே நேரத்தில் நம்முடைய பக்திவைராக்கியமும் பாவத்தின்மீதுள்ள வெறுப்பும் நம்மையும் நம்மை சுற்றியுள்ளவர்களையும் காப்பாற்றும்.

<u>செயல்முறை:</u> 1.தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாக கீழ்படிவதற்கு இருக்கும் தடைகளைப்பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். 2. நாம் சமரசம் (compromise) செய்யும் பாவங்களை குறித்து வழிநடத்துநரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*“அப்பொழுது: உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்.”* யோவான் 2:17



இந்த அதிகாரத்தில் 38 வருடங்கள் கழித்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களை இரண்டாவது முறையாக தொகைபார்க்கிறார். எண் 1:2-3ல் வாசிக்கும்போது, எகிப்தைவிட்டு அவர்கள் வெளியேறினபோது முதல் முறையாக தேவன் அவர்களை தொகைபார்த்தார். இப்பொழுது இரண்டாவது முறையாக அவர்களை தொகைபார்க்கச்சொல்கிறார்.

தேவன் இஸ்ரவேலரை முதல் முறை தொகைபார்க்கச் சொன்னபோது இருந்த எண்ணிக்கையோடு இரண்டாவதுமுறை தொகைபார்க்கச் சொன்னதை நாம் ஒப்பிடும்போது அநேக மாற்றங்களை நம்மால் காணமுடிகிறது. இதில் சில கோத்திரத்தின் வளர்ச்சியையும் சில கோத்திரத்தின் வீழ்ச்சியையும் பார்க்கமுடிகிறது. அவர்கள் அநேகரின் வீழ்ச்சிக்குக் காரணம் அவர்கள் பாவம் செய்து தேவன் மீதான விசுவாசத்தை மறுதலித்து வனாந்தரத்தில் மாண்டார்கள். சிலர் பக்திவைராக்கியத்துடன் தேவனோடும் அவருடைய வார்த்தியோடும் இணக்கமுள்ளவர்களாக வாழ்ந்து வளர்ச்சியடைந்தார்கள்.

இன்று தேவன் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையை சோதித்து பார்த்தால் நாம் வளர்ச்சியடந்தவர்களாக தென்படுவோமா அல்லது வளர்ச்சியடையாதவர்போல் தென்படுவோமா என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கு எது முழுமுதல் காரணமாயிருக்கிறது? எந்த சில செயல்கள் நம்மை நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் வளர்ச்சியடையச் செய்யாமலிருக்கிறது?

<u>செயல்முறை:</u> நீங்கள் உங்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் வளர்ச்சியடைந்த செயல்களை சிந்தித்துப்பார்த்து அதற்க்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

*“8. அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. 9. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. 10. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். 11. இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.” 1 கொரி 10:8-11*

செலோப்பியாத்தின் குமாரத்திகள் வந்து தன் தகப்பனுக்கு சேர வேண்டிய காணியாட்சி நிலங்களை மோசேயிடம் கேட்க வந்தனர். இங்கு மோசே அந்த குமாரத்திகளுக்கு சொல்ல வேண்டிய நியாயங்களை குறித்து அதை கர்த்தரிடம் கொண்டு சென்றார். கர்த்தர் அதற்கு சரியான பதிலை அளித்தார். இந்த இடத்தில் மோசேயின் தாழ்மையான குணம் கீழ்படிதல் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் காரியங்களை பார்க்க முடிகிறது.

மோசே பல வருடங்களாக ஜனங்களை வழிநடத்தி வந்தாலும் அவர் எந்த காரியமானாலும் அதை தேவனிடம் முதலில் கொண்டு செல்ல தயாராக இருந்தார். தன்னுடைய சுயபுத்தியினால் எந்த பதிலையும் சொல்லாமல் அதை தேவனிடம் கொண்டு சென்றபோது அது நன்மையாக சிறந்த காரியமாக முடிந்தது.

இன்று நாம் மோசே போல் இருக்கிறோமா அல்லது நமது வாழ்க்கையில் நாமே முடிவெடுத்துக்கொள்கிறோமா? அல்லது வேத வசனத்தின் பிரகாரம் ஆத்மீகமான நல்ல முடிவுகளை எடுக்கிறோமா என்று யோசிக்க வேண்டும். வசனத்தின் பிரகாரம் எடுக்கும் முடிவே சரியான பாதையில் நம்மை கொண்டு செல்லும்.

வசனம் 16-23 வரை வாசிக்கும்போது மோசேக்கு பிறகு அந்த ஜனங்களை வழிநடத்த தேவனுடைய கண்களுக்கு யோசுவா தென்பட்டார். சபையில் உள்ள பொறுப்புகளை செய்ய தேவனுடைய கண்களுக்கு தென்படக்கூடிய அளவிற்கு நம் வாழ்க்கை இருக்கிறதா என்று நாம் யோசிக்க வேண்டும். நம்முடைய கீழ்படிதல் மற்றும் தேவனைத்தேடும் எண்ணம் எவ்வாறாக இருக்கிறது? யோசுவாவைப் போன்று நாம் தேவனுடைய பார்வையில் தெரியக்கூடியவர்களாக இருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்ப்போம்.

<u>செயல்முறை:</u> தேவன் நம்முடைய வாழ்க்கையில் கொடுத்த அவருடைய மேலான கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

*“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;” எபேசி 2:8.*



இஸ்ரவேல் மக்கள் வாக்குதத்தம் பண்ணின இடதுக்கு போனபிறகு அவர்கள் தகனபலிகளையும், காணிக்கையையும் செலுத்தவேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். மேலும் செலுத்தப்படும் ஆட்டுகுட்டிகள், காளைகள் பழுதற்றதாக இருக்கவேண்டும் என்று கூறுகிறார் (வசனம் 31), கர்த்தருக்கு அது சுகந்தவாசனையாக இறுக்கிறது.

இயேசு மாம்சத்தில் இருந்த நாட்களில் எல்லாவிதத்திலும் சோதிக்கபட்டு, அடிக்கப்பட்டு, நோறுக்கப்பட்டு நம்முடைய பாவத்திற்க்காக சிலுவையில் மறித்திருக்கிறார். மேலும் நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்திருக்கிறார், நாமும் அவ்வாரே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். (எபெசியர் 5:2)

ஆனால் இன்று நம்முடைய சீஷத்துவ வாழ்க்கையில் நாம் செய்யும் காரியங்கள் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நாம் ஜெபம் செய்யும்போது, வேதாகமம் வாசிக்கும்போது, மற்றவர்களை சபைக்கு அழைக்கும்போது, சபை கூட்டத்திற்கு வரும்போது மேலும் வழிநடத்தப்படும் நேரத்தில் நம்முடைய இருதயத்தை முழுமையாக செலுத்துகிறோமா அல்லது ஒரு கடமையாகவோ மற்றவர்கள் அல்லது வழிநடத்துனர் கேட்பார் என்பதற்க்காக செய்யக்கூடியவர்களாக இருக்கிறோமா?

(மல்கியா 1:6-9)அப்படி செய்தோம் என்றால் நாம் தேவனுக்கு ஊனமானதைத்தான் கொடுக்கிறோம், தேவன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். மேலும் நம்முடைய பெலவீனங்களில் இருந்து நம்மால் மாறவும் முடியாது. ஆகையால் தேவனிடம் செல்லும்போது எப்படிப்பட்ட இருதயத்தோடு செல்லுகிறோம் என்று சிந்தித்து பார்ப்போம்.

<u>செயல்முறை:</u> இன்று எந்த எந்த காரியங்களுக்கு தேவனை காட்டிலும் முக்கியதுவம் கொடுக்கிறோம் என்று பட்டியலிட்டு, அதில் இருந்து மாறுவதற்க்கு வழிநடத்துனரிடம் சென்று ஆலோசனை பெற்றுக்கொள்வோம்.

*“நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.” கொலோ 3:23-24.*

கர்த்தருக்கு செலுத்தப்படும் சர்வாங்க தகனபலிகளைக் குறித்து இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் மாதத்தில் மூன்று நாட்கள் மிகவும் விசேஷித்த நாட்களாயிருக்கிறது. ஏழாம் மாதம் முதல் தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு எக்காளம் ஊதும் நாளாகும் (29:1-6). ஏழாம் மாதம் பத்தாம் தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு பாவ நிவாரண பலிகளை செலுத்தும் நாளாகும் (29:7-11). ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கும் நாளாகும் (29:12-38).

இஸ்ரவேல் புத்திரருக்கு வருடத்தின் மற்ற மாதங்களைவிட ஏழாம் மாதம் மிகவும் பரிசுத்தமானதாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட முதலாவது மாதம், வருடத்தின் ஏழாவது மாதமாயிருக்கிறது. யூபிலி பற்றிய பிரமாணங்களில், வருடத்தின் ஏழாவது மாதமே முதலாவது மாதமாக கணக்கிடப்படுகிறது. ஏழாவது மாதத்தில் கடன்கள் மன்னிக்கப்படும். அதேபோல் அடிமைப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வருடத்தின் ஏழாவது மாதத்தில் ஓய்வாக இருப்பார்கள். இது அவர்களுடைய அறுவடை காலத்திற்க்கும் விதைப்புக்காலத்திற்க்கும் நடுவில் வரும் மாதமாகும். இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாவது மாதத்தில் விதைப்பும் இருக்காது, அறுவடை வேலையும் இருக்காது அவர்கள் ஓய்வடைந்து இருப்பார்கள். இந்த ஓய்வு காலத்தில் அவர்கள் தேவனுக்கு அவருடைய பரிசுத்த ஸ்தலத்திலே சபையாகக் கூடிவந்து பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவநிவாரணபலிகளை செலுத்தும் வேளையில் தங்களுடைய இருதயங்களை தாழ்த்துகிறார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு கூடாரப்பண்டிகையை மிகவும் மகிழ்ச்சியுடனும் பரிசுத்தத்துடனும் கொண்டாட தங்களுடைய இருதயங்களை தயார் செய்து கொள்கிறார்கள். இது தேவன் அவர்களுக்கு விதித்த கட்டளையாயிருக்கிறது. (லேவி 23:42-43).

<u>செயல்முறை:</u> உங்களுடைய வாழ்க்கையில் பாரமாய்த்தோன்றுகின்ற காரியங்களைக்குறித்து உங்கள் வழிநடத்துனரிடம் பேசவும்.

*''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.''* மத் *11:28.*



பொருத்தனைகள் பண்ணுவதை பற்றி இந்த அதிகாரத்தில் கர்த்தர் தெளிவாக கூறுகிறார்.

சொல் தவறாமல் இருப்பதன் அவசியத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பொருத்தனை செய்பவர் தங்கள் வாக்கின்படியே செய்யவேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்கிறார். நாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது அனைவரின் முன்பாகவும் இயேசுவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறிய வாக்கிற்க்கு எந்த அளவிற்க்கு உண்மையுள்ளவராக இருக்கிறோம்? நம்முடைய வாழ்க்கையில் யார் ஆண்டவராக இருக்கிறார்?

கணவனே குடும்பத்தின் தலைவர் என்பதற்கு இப்பகுதியில் சொல்லப்பட்ட காரியங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவைப்போல ஒரு சிறந்த தலைவராக அதிகாரத்தினால் ஆளாமல் அன்பினால் ஒருவரையொருவர் கனத்துடன் நடத்த வேண்டும்.

(1கொரிந்தியர் 11:3) நம் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து தலையாக இருக்கிறார் எனவே நாம் நமது விருப்பத்தின்படி செய்யமால் கிறிஸ்து இயேசுவின் சித்தத்தின்படியே செய்ய வேண்டும்.

இயேசு கிறிஸ்து உங்களுக்கு எதையும் செய்ய தயாராகவும் உண்மையுள்ளவராகவும் இருக்கிறார். அவர் வாக்கு மாறாத தேவன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

<u>செயல்முறை:</u> சீஷராகும் போது தேவனுக்காக நீங்கள் எடுத்த தீர்மானங்களை நினைவுகூர்ந்து அந்த வாக்கிற்க்கு எந்த அளவிற்கு உண்மையுள்ளவராக இருக்கிறோம் என்பதை மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*''இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்..'' எபிரெ 13:8.*

இந்த அதிகாரத்தில் தேவன் இஸ்ரவேல் புத்திரருக்காக மீதியானியரிடம் போர்செய்வதையும் மற்றும் பரிசுத்தப்படுத்துவதையும் நம்மால் பார்க்கமுடிகிறது. இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் துரோகம் செய்து அவர்கள் பாவத்தில் விழ காரணமாயிருந்த மீதியானியரை அழிக்கவேண்டுமென தேவன் கூறியிருந்தார். இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்வதற்க்கு மீதியானியர் காரணமாயிருந்தனர் (எண் 25:6-18). மோசே பாவத்தைக்குறித்து எச்சரித்ததுமல்லாமல் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் அனைவரையும் அழிக்கும்படி கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அநேக வேளையில் ஒழுக்கம் கெட்டவர்களாகவும், விக்கிரகாராதனைக்காரர்களாகவும் மற்றும் விபச்சார பாவத்தில் விழுந்தவர்களாகவும் இருந்ததனால் மோசே அவர்களின் செயல்களைக்குறித்து எச்சரித்தார். இன்று நம்முடைய வாழ்க்கையில் ஒழுங்கின்மையும், விக்கிரகாராதனையும் பெறும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

வசனங்கள் 21-24வரை வாசிக்கும்போது சுத்திகரிப்பின் முறையைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு எல்லாவற்றையும் அக்கினியினால் சுத்திகரித்து சுத்தமாக்கினார்கள் (யோபு 23:10). இன்று நம்மை அக்கினியால் சோதித்தால் நாம் எவ்வாறு பிரதிபலிப்போம்?

ஒரு சிறிதளவு கூட பாவத்தின் செயல்களோ அல்லது அதை பிரதிபலிக்கும் காரியங்களோ நம்மிடம் தெரியக்கூடது என்பதில் தேவன் தெளிவாக இருக்கிறார். இதனால் தான் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பாவசெயலுக்கு காரணமாயிருந்த அனைத்தையும் தேவன் அழிக்கக் கட்டளையிடுகிறார். நம்முடைய வாழ்வில் இருக்கும் பாவ செயல்களை அழிக்க தீர்மானம் எடுப்போம்.

<u>செயல்முறை:</u> இன்று உங்களுடைய வாழ்க்கையில் இருக்கும் பாவத்திலிருந்து உங்களை சுத்திகரித்துக்கொள்ள வசனத்தின்படி முயற்சி செய்து காட்டவும்.

*''மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது.'' எபே 5:3.*



இந்த அதிகாரத்தில் யோர்தானுக்கு கிழக்கே தங்களுக்கு சொத்துரிமை தரும்படி ரூபன் மற்றும் காத் கோத்திரத்தார் கேட்ட காரியங்களை நம்மால் பார்க்க முடிகிறது.

மோசே காத் புத்திரரையும் ரூபன் புத்திரரையும் நோக்கி உங்கள் சகோதரர் யுத்தத்திற்க்கு போகையில் நீங்கள் இங்கே இருப்பீர்களா? நீங்கள் செய்கிற இந்த காரியங்கள் மற்ற இஸ்ரவேல் மக்களை திடனற்று போகப் பண்ணுகிறதாக இருக்குமே என்று மோசே சொன்னவுடனே காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு மற்ற சகோதரர்களுக்காக போர் செய்ய தயாரானார்கள்.

நாம் சீஷர்களாக இருக்கும்போது நம்முடைய முடிவுகள் செயல்கள் மற்ற சீஷர்களை உற்சாகப்படுத்தக்கூடியதாக இருக்கிறதா அல்லது மற்றவர்களை திடனற்று போக பண்ணுகிறதாக இருக்கிறதா? என்று யோசிக்க வேண்டும். ஏனென்றால் கானான் தேசத்தை சுற்றி பார்த்து வந்த பத்து நபர்களின் அறிவிப்பை கேட்ட மற்ற அநேக இஸ்ரவேல் மக்களின் விசுவாசம் உடைந்து அவர்கள் அழிந்து போனார்கள்.

இன்றைக்கு யோசுவா, காலேபை போல நம் விசுவாசம் மற்றவர்களை ஊக்குவிக்கிறதாக இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும்.

காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் நமக்கு காணியாட்சி போதும் என்று நினைக்காமல் மற்ற கோத்திரத்தாருக்காகவும் போரிட தயாராக இருந்தனர்.

இவர்களின் வாழ்க்கையில் சுயநலம் இல்லாமல் இருந்தனர். இன்று நாம் சுயநலம் உள்ளவர்களாக இருக்கிறோமா அல்லது மற்ற சீஷர்களின் வாழ்க்கை நன்மையாக செல்ல உதவி செய்யக்கூடிய அளவிற்கு இருக்கிறோமா என்று யோசிக்க வேண்டும்.

<u>செயல்முறை:</u> உங்கள் குடும்ப சபையிலுள்ள சீஷர்களின் பலவீனங்களுக்காகவும் மற்றும் அவர்களின் தேவைகளுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்.

*''ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.'' யோவான் 15:13.*

மோசேயானவர் தேவன் தங்களை அழைத்துவந்த விதத்தை பட்டியல் இடுகிறார். ஏன் தேவன் இதை பட்டியலிட சொல்ல வேண்டும், ஏன் என்றால் அவர் தங்களை வழிநடத்தி வந்த விதத்தை நினைவுகூற வேண்டும் என்பதற்க்காகவே. இன்று தேவன் நம்மையும் பழைய பாவமான வாழ்க்கையில் இருந்து அழைத்து வந்திருக்கிறார். எந்த நிலமையில் இருந்து அவர் நம்மை அழைத்து வந்தார் என்று நாம் நினைவில் கொள்வோம்.

மேலும் தேவன் அனைத்தையும் கணக்கு வைக்கக்கூடியவறாக இருக்கிறார். இன்று நாம் பேசும் வார்த்தைக்கும், செயலுக்கும் நாம் தேவனிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபிரெயர் 4:13), ஆகையால் இன்று நம்முடைய வார்த்தைகள், செயல்கள் எப்படி பட்டதாக இருகிறது மற்றவர்களுக்கு பிரியோஜனம் ஊள்ளதாக இருகிறதா அல்லது காயப்படுத்தக்குடியதாக உள்ளதா? (எபெசியர் 4:29, ரோமர் 15:2).

வசனம் 54ல் பார்க்கும்போது தேவன் தேசத்தை பங்கிட்டு கொடுக்கிறார். அதில் அதிக ஜனத்தாருக்கு அதிக சுதந்திரமும் கொஞ்சம் ஜனத்தாருக்கு கொஞ்சம் சுதந்திரமும் கொடுக்க சொல்கிறார். இன்று நம்முடைய சுதந்திரம் நம் தேவன் மட்டும்தான். இப்படிப்பட்ட சுதந்திரத்தை நாம் பெற்றுக்கொள்ளப் போகிறோமா அல்லது இந்த பாவம் நிறைந்த உலகம் தரும் அற்பசந்தோஷத்தை நாடிப்போகிறோமா?

நாம் மெய்யான சீஷர்களாக வாழும்போதுதான் நம்முடைய சந்ததியும் மெய்யான சீஷர்களாக வாழ்வார்கள், இதுதான் நாம் அவர்களுக்கு வைத்து போகக்கூடிய சுதந்திரம். இதில் நாம் வாழ்நாள் முழுதும் உறுதியாக நிலை நிற்போம்.

<u>செயல்முறை:</u> நீங்கள் சபைக்கு வந்த அந்த நாளிலிருந்து இன்றுவரையுள்ள காலத்தைக் கணக்கிட்டு ஒரு வரைபடம் வரையவும். உங்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் பிரயாண (Chirstian Journey) காலவரைபடம்.

*''எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.'' 1 கொரி 1:26-27.*



தேவன் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அதன் நான்கு புற எல்லைகளையும் தேவன் தீர்மானித்திருக்கிறார். தேவன் அவர்களை எங்கே வழிநடத்துகிறார் எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதை அவர் அறிவார். அவர்களை இங்கே தயார் படுத்துகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்தால் கானான் தேசத்தை முழுவதுமாக சுதந்தரித்துக்கொள்வார்கள். அப்படி கீழ்படியவில்லையென்றால் அவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதமானது தடைபடும்.

*''உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்; வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐபிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்.'' உபாகமம் 11:24.* என்று நாம் வாசிக்கிறோம்.

அவர்களுடைய எல்லை ஐபிராத்து நதி வரையிலும் பரவியிருக்கும். கானான் தேசத்தின் எல்லை எகிப்தின் நதிவரைக்கும் சுற்றிப்போய் கடலில் முடியும் என்று கர்த்தர் சொல்கிறார். இஸ்ரவேல் இந்த நதியைப் பார்க்கும்போது, தாங்கள் ஒரு காலத்தில் எகிப்தில் அடிமைகளாயிருந்ததையும், கர்த்தர் அவர்களை தம்முடைய பலத்த புயத்தினால் விடுவித்து இந்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்க்கு அழைத்து கொண்டுவந்திருக்கிறார் என்பதையும் நினைவுகூர்ந்து நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

இந்த கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நல்ல தேசம் மற்றும் செழிப்பான தேசம். இதைக்குறித்து தானியேல் புத்தகத்தில் "சிங்காரமான தேசம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் நம்மை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இடமாகிய அவருடைய இராஜ்ஜியத்திற்க்கு அழைத்து செல்கிறார். அவருடைய இராஜ்ஜியம் அழியாதது. தேவன் அருளும் பரலோக இராஜ்ஜியம் ஈடு இணையற்றது.

<u>செயல்முறை:</u> பரலோக இராஜ்ஜியமானது எவ்வாறு இருக்கும் என்பதை வசனத்தோடு ஒப்பிட்டு தியானியுங்கள்.

*''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.'' யோவான் 14:2.*

இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு கானான் தேசத்தை பங்கு பிரித்து கொடுக்கும்போது லேவி கோத்திரத்தாருக்கு கொடுக்க வேண்டியப் பங்கைப் பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல்புத்திரர் தங்கள் சுதந்திரத்திலிருந்து லேவியருக்கு இடங்களை ஒதுக்கி கொடுக்க வேண்டும் என கர்த்தர் கட்டளையிடுகிறார். இதன் மூலம் லேவியர் தேவை பூர்த்தி செய்யப்படும்.

கர்த்தர் அடைக்கல பட்டணங்களை பற்றிய பிரமாணத்தை மோசேயிடம் கூறுகிறார். அறியாமல் கொலை செய்தால் அவனுக்கு இந்த அடைக்கல பட்டணம் குறிக்கப்பட்டிருக்கும். அவனை கர்த்தருடைய சந்நிதியை விசாரித்து பழிவாங்குகிறவன் கைக்கு தப்பும்படி மறுபடியும் அதில் திரும்ப வேண்டும்.

இதைபோல் பாவியாகிய நம்மை இயேசு தம்முடைய கிருபையாகிய அடைக்கலப்பட்டணத்தில் விசாரித்து அவரது சபையில் சேர்த்திருக்கிறார். கொலை செய்தவன் அடைக்கலப்பட்டணத்தின் வெளியே வரும்போது நிச்சயம் மரிப்பதற்க்கான வாய்ப்புகள் அதிகம். நாமும் அவ்ருடைய சபையை அசட்டைசெய்து தேவனைவிட்டு வெளியேறும் போது நம்முடைய இருதயம் பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டு தேவனைவிட்டு விலகி பழைய பாவங்களினால் மரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

வசனம் 33ல் பாவநிவர்த்தி செய்ய இரத்தத்தை சிந்தினவனுடைய இரத்தம் சிந்தப்பட வேண்டும். ஆனால் இயேசு நம்முடைய பாவங்களை அவரது இரத்தத்தை சிந்தி மன்னித்திருக்கிறார்.

<u>செயல்முறை:</u> இலவசமாய்அவருடைய கிருபையினால் கொடுத்த அடைக்கல பட்டணமாகிய அவருடைய சபைக்காக நன்றி செலுத்துவோம்.

*''சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்.'' எபிரெ 3:12-13.*



இந்த அதிகாரத்தில் யோசேப்பின் குமாரனுடைய வம்சத்தில் மனாசேயின் குமாரன் மாகீருக்கு பிறந்த கீலேயாத்தின் வம்ச தலைவர்கள் மோசேயிடம் வந்து தங்களுடைய சுதந்திரபாகத்தைக்குறித்த பிரச்சனையை விசாரிக்கும்படி முறையிடுகிறார்கள்.

இந்த பிரச்சனைக்கு அவர்கள் அனைவரும் தேவன் நியமித்த கட்டளையின் பிரகாரம் தீர்வு காண்கிறார்கள். இதேபோன்று அப் 6:1-3ல் வாசிக்கும்போது விதவைகள் குறித்தக்காரியத்தில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் தேவனை சார்ந்து முடிவெடுத்தார்கள். இதேபோன்று நீதி 3:5ல் நாம் நம்முடைய சுயபுத்தியின் மேல் சாரக்கூடது என்று கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய பிரச்சனைகளை நாம் சரியான ஆலோசனை தரும் நபரிடம் கேட்டு அது வசனத்திற்க்கு உகந்ததாக இருக்கும் வண்ணம் முடிவுகள் எடுப்போம்.

நமக்கு பிரச்சனைகளோ அல்லது கிறிஸ்துவ வாழ்க்கையில் குழப்பங்களோ ஏற்படும்போது நாம் யாரிடம் செல்கிறோம்? யாரிடத்தில் ஆலோசனைகளை பெறுகிறோம்?

எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு. தேவனுக்கு எதுவும் கடினமான காரியம் கிடையாது. வேதம் முழுவதிலும் இதை வாசிக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்களை மீட்க எகிப்தில் அற்புதங்கள் செய்ததிலிருந்து எகிப்திலிருந்து கொண்டுவந்து வனாந்தரத்தில் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்க்கு அழைத்துவந்தது வரை எண்ணிமுடியா நன்மைகளையும் அதிசயங்களையிம் தேவன் நிகழ்த்தினார். இந்த அதிகாரத்தில் சொல்லப்படும் இந்த பிரச்சனை தேவனுக்கு ஒரு பெரிய பிரச்சனையே கிடையாது. இவ்வளவாய் நடத்தி வந்த தேவன் நம்மை இன்னும் அற்புதமாய் வழிநடத்துவார்.

<u>செயல்முறை:</u> உங்களுடைய வாழ்க்கையில் உங்களால் முடியாத காரியம் என்று எதை நீங்கள் நினைக்கிறீர்களோ அதை தேவனிடம் தெரியப்படுத்துங்கள்.

*''இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? '' எரேமியா 32:27.*